# பரீட்சகரின் அறிக்கை

**AA2 பரீட்சை – 2016 யூலை**

## (AA15) வியாபாரத் தொழிற்பாடுகளும் முகாமைத்துவமும்

---

பாடப் பரப்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள ஒட்டுமொத்த அறிவையும் விளக்கத்தையும் பரீட்சிக்கும் நோக்கத்துடன் பாடத்திட்டத்தின் குறித்த எடைக்கேற்ப வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்தின் சகல பாடப்பரப்புகளையும் எப்போதும்போன்று உள்ளடக்கிய முழுமையான வினாப்பத்திரமாக இது காணப்பட்டது. மொத்தத்தில் பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக அமைந்திருந்தபோதிலும் உரிய விடைகளை எழுதத் தவறிய குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். பரீட்சார்த்திகள் வினாப்பத்திரத்திற்கு எவ்வாறு விடையளித்திருக் கிறார்கள் என்பதை அவதானிப்பதன் மூலம் பரீட்சார்த்திகள் வெற்றிகரமான புள்ளிகளைப் பெறத் தவறிய பாடப்பரப்புகளில் கூர்ந்த கவனத்தைச் செலுத்தி அவர்களுக்கு உதவுவதே பரீட்சகர்களின் அறிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

ஒவ்வொரு வினா தொடர்பிலும் புள்ளியிடும் பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் கீழே தனித்தனியாகத் தரப்பட்டுள்ளன.

### <u>பகுதி A</u>

### வினா இல. 01

இந்தப் பகுதியில், வியாபாரத் தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவப் பாடத்தின் ஒட்டுமொத்த பாடப்பரப்புகளும் உள்வாங்கப்பட்டிருந்ததுடன் எப்பொழுதும் சகல பரீட்சார்த்திகளும் விடையளிக்க முயற்சிக்கின்ற வினாவாகவும் இது காணப்படுகிறது. இந்த வினாவுக்கு மொத்தமாகவுள்ள 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இங்கு தெரிவுசெய்யப்பட்ட விடைகளின் இலக்கங்களை உரிய வினாவின் இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுமாறு தெளிவாகக் கூறப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் விடைக்குரிய இலக்கத்தை எழுதுவதற்குப் பதிலாக முழுமையான விடையினை வினா இலக்கத்துடன் எழுதியிருந் தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா இலக்கங்கள் 1.3, 1.9, 1.16 ஆகியவற்றிற்கு வெற்றிகரமாக விடையளிக்கத் தவறியிருந்தனர். அவை தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன :

**1.3** இங்கு பங்குடமை உடன்படிக்கைகள் பற்றிய சரியான விளக்கத்தைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப் பட்டது. மிகவும் குறித்ததொரு விடையே எதிர்பார்க்கப்பட்டதாயினும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.9** இது ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனி ஒன்றினால் செயலாற்ற முடியாத பணிக்கான சரியான விடையினைப் பல பரீட்சார்த்திகள் தெரிவுசெய்திருக்கவில்லை.

**1.16** இந்த வினா வினைத்திறன் மற்றும் விளைதிறன் பற்றிய விளக்கத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வினைத்திறன் மற்றும் விளைதிறன் ஆகிய இரு பதங்களுக்குமிடையேயான வேறுபாடு பற்றி பல பரீட்சார்த்திகள் விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை.

எனவே, பரீட்சார்த்திகள் வியாபாரத் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மீது தமது அறிவினை வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும். மேற்படி வினாக்கள் தவிர்ந்த, வினா இலக்கம் 1 இல் காணப்பட்ட ஏனைய வினாக்களுக்கு அதிகளவான பரீட்சார்த்திகள் நல்லமுறையில் விடையளித்திருந்தனர். வினா இலக்கம் 01 இற்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தி கரமானதாக இருந்தது.

## பகுதி B

இந்தப் பகுதி 40 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு வினாவும் 10 புள்ளிகளைக் கொண்டிருந்தது.

### வினா இல. 02

இவ்வினா பங்குடமையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ்வினாவின் பகுதி (a) இல் பங்காளர் ஒருவரின் உரிமைகள் நான்கினை (04) எழுதுமாறும் பகுதி (b) இல் தனியுடமையொன்றுடன் ஒப்பிடும்போது பங்குடமை ஒன்றின் அனுகூலங்கள் மூன்றினை விபரிக்குமாறும் கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (a) அதேபோன்று பகுதி (b) ஆகியவற்றுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்ததுடன் உயர்ந்தளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினாவைச் சரியானவாறு விளங்கிக்கொள்ளத் தவறியிருந்தனர். மேற்படி வினாவின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

பகுதி (a) இல் பங்காளர் ஒருவரின் நான்கு (04) உரிமைகளைக் குறிப்பிடுமாறு விசேடமாகக் கூறப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் நான்கிலும் குறைந்த உரிமைகளைக் குறிப்பிட்டி ருந்தனர். அத்துடன் வினாவில் ‘‘குறிப்பிடுக’’ எனத் தெளிவாக அறிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் பங்காளர் ஒருவரின் உரிமைகளை விபரித்து விளக்கமாக எழுதியதன் மூலம் தமது நேரத்தினைத் தேவையற்ற விதத்தில் வீணடித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

பகுதி (b) இல், தனியுடமை ஒன்றுடன் ஒப்பிடாது பங்குடமை ஒன்றின் அனுகூலங்களை விபரித்ததன் வாயிலாக சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளிப்பதற்கு முன்பதாக வினைச்சொல் தொடர்பில் அதிக கவனத்தைச் செலுத்தி வினாவில் என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதை வாசித்து விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

### வினா இல. 03

இங்கு வியாபாரச் சூழல் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

பகுதி – (a) இங்கு புறச் சூழலின் ஆக்கக்கூறுகளை அடையாளங்காணத் தேவைப்படுத்தப்பட்டது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் புறச் சூழலின் ஆக்கக்கூறுகள் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அவர்கள் புறச் சூழல் மற்றும் அகச் சூழல் ஆகிய இரண்டினைப் பற்றியும் எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற சூழல்கள் போன்ற பிழையான விடைகளை எழுதியிருந்தனர்.

பகுதி (i) இற்குச் சரியான விடையினை அடையாளங்கண்டிருந்த சில பரீட்சார்த்திகள் பகுதி (ii) இற்கான நுண்ணிய சூழல் மற்றும் பெரும்பாகச் சூழலின் பண்பியல்புகளை குறிப்பிட்டிருக்கவில்லை. எனவே வியாபாரச் சூழல் மற்றும் அதன் வகைப்படுத்தல்கள் பற்றித் தெளிவானதும் தீர்மானமானதுமான அறிவினைப் பெறுவது பயனுடையதாகும்.

பகுதி – (b) இந்தப் பிரிவு PEST பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் தேயிலைத் தொழிற்றுறையில் தொழிற்படுகின்ற ஒரு கம்பனிக்கு PEST பகுப்பாய்வினை எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பதை விபரிப்பதன் மூலம் நடைமுறை அறிவுடன் அதனை தொடர்புபடுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. வினாவின் இப்பிரிவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் PEST என்றால் என்னவென்பதை அடையாளங்கண்டிருந்தனர். ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் தற்கால இலங்கை சூழமைவில் ABC கம்பனிக்கு PEST இனைப் பிரயோகிப்பது பற்றித் தெளிவான விபரிப்பைக் கொண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் PEST பகுப்பாய்வுக்குப் பதிலாக SWOT பகுப்பாய்வினை விபரித்திருந் ததன் மூலம் முழுமையாகத் தொடர்பற்ற ஒரு விடையினை வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. பரீட்சார்த்திகள் உயர்ந்தளவான புள்ளிகளைப் பெறும் பொருட்டு வியாபாரத் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் நடைமுறை விடயங்கள் பற்றிய முழுமையான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## வினா இல. 04

இவ்வினா உற்பத்தி மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இவ்வினாவின் பகுதி (a) இற்கு விடையளிக்க முனையவில்லை என்பதுடன் இவ்வினாவுக்கான செயலாற்றுகையும் திருப்திகரமானதாகக் காணப்படாமை அவதானிக் கப்பட்டது.

பகுதி – (a) உற்பத்தி நிறுவனமொன்றை சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து வேறுபடுத்து வதற்குப் பயன்படுத்தப்படும் பண்பியல்புகளைக் குறிப்பிடுமாறு கோரப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து உற்பத்தி நிறுவனம் ஒன்றை வேறுபடுத்துவதற்குப் பயன்படுத்தக்கூடிய பண்பியல்புகளைக் கருத்திற் கொள்ளாது, உற்பத்தி நிறுவனமொன்றின் பண்பியல்புகளை எழுதியிருந்தனர்.

பகுதி – (b) இப்பகுதி சேவை வடிவமைப்புச் செயன்முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் சேவை வடிவமைப்புச் செயன்முறையை அடையாளங் காணாதிருந்ததுடன் அவர்கள் சேவை வடிவமைப்புச் செயன்முறைக்குப் பதிலாக உற்பத்திச் செயன்முறை, மனித வள முகாமைத்துவத்தில் தொழில் ஒன்றை உருவாக்குதல் போன்ற பிழையான விடைகளை எழுதியிருந்தனர்.

பரீட்சார்த்திகள் வியாபாரத் தொழிற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பில் ஆழமான அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## வினா இல. 05

இங்கு மனித வள முகாமைத்துவம் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது.

பகுதி – (a) இப்பகுதி மனித வள முகாமைத்துவத்தின் நோக்கங்களைப் பரீட்சித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

பகுதி – (b) இப்பகுதி நிறுவனமொன்றில் தொழிலுக்கு அறிமுகப்படுத்தலின் முக்கியத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் ''தொழிலுக்கு அறிமுகப் படுத்தல்'' என்னும் பதத்தினை விளங்கிக்கொள்ளவில்லை. சில பரீட்சார்த்திகள் நாடுபூராவும் கிளைகளைத் தாபித்தல் என எழுதியிருந்த அதேவேளை வேறு சிலர் பயிற்சிகளை நடாத்துதல் போன்ற பிழையான விடைகளை விபரித்து எழுதியிருந்தனர். எனவே பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவத்தில் திட்டமிடல் மற்றும் ஊழியரிடல் தொடர்பில் ஆழமான புரிதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## வினா இல. 06

இது **லில்லி பி.எல்.சீ.** தொடர்பான காட்சியமைப்பொன்றின் அடிப்படையிலமைந்த வினாவாக இருந்ததுடன் இங்கு மனித வள முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் ஆகியவற்றின் வகிபாகம் பற்றிய அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இப்பரப்புகளில் ஆழமான அறிவினைக் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் பல பரீட்சார்த்திகள் வினாவை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ளாமையும் இங்கு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு நல்ல புள்ளிகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

பகுதி – A தரப்பட்ட காட்சியமைப்பை நடைமுறை பின்புலத்துடன் தொடர்புபடுத்த வேண்டியிருந்த போதிலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் அவர்களது விடைகளில் அவ்விடயத்தைத் தவிர்த்து, கோட்பாட்டு சூழமைவினை மீளவும் சமர்ப்பித்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் **லில்லி பீ.எல்.சி.** இற்குப் பொருந்தக்கூடிய பயிற்சி முறைகளை விபரிப்பதற்குத் தவறியிருந்ததுடன் அவர்கள் பயிற்சி முறைகளின் படிமுறைகளை மாத்திரம் எழுதியிருந்தனர். பிரதான கோட்பாடுகள் பற்றி மனித வள முகாமைத்துவத்தில் பெற்றுக்கொண்ட கோட்பாட்டுரீதியான அறிவினை உண்மையான வாழ்க்கை முறையினுள் பிரயோகிப்பதில் பரீட்சார்த்திகள் கஸ்டங்களை எதிர்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

பகுதி – B **லில்லி பீ.எல்.சி.** இற்கு இருக்கக்கூடிய விநியோகத் தொழிற்பாடுகளை முகாமை செய்யும் அறிவைப் பரீட்சிப்பதற்கு இவ்வினாவில் எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். அவர்களில் சிலர் இந்தியாவில் **லில்லி**யின் விநியோகத் தொழிற்பாடுகளை முகாமை செய்வதுடன் தொடர்புபட்ட பிரதான தீர்மானங்களை எழுதுவதற்குப் பதிலாக விநியோகச் செயன்முறையினை விபரித்திருந்தனர். குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் தரப்பட்ட காட்சியமைப்புடன் தொடர்பற்ற விதத்தில் விநியோகத் தொழிற்பாடுகளை முகாமை செய்வதுடன் தொடர்புபட்ட பிரதான தீர்மானங்களை விபரித்திருந்தனர். எனவே பரீட்சார்த்திகளின் இந்நிலை காரணமாக அவர்கள் இவ்வினாவுக்கு குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

பகுதி – C இவ்வினா **லில்லி பி.எல்.சீ.** தமது உற்பத்திப் பொருட்களை ஊக்குவிப்பதுடன் தொடர்புபட்ட விளம்பரப்படுத்தல் வழிவகைகளைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான மாணவர்கள் விளம்பரப்படுத்தல் தொடர்பான அவர்களது பொது அறிவினைக் கொண்டு நன்றாக விடையெழுதியிருந்ததுடன் முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

பொதுவாக, இந்த வகை வினாக்களில் சரியான கோட்பாட்டு அடிப்படையில் பரீட்சார்த்திகள் தமது விடைகளை நியாயப்படுத்துவதில் தமது அறிவை மேம்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற விடயம் முக்கியமாகக் காணப்பட்டது. பரீட்சார்த்திகள் இவ்வகையான காட்சியமைப்பு அடிப்படையிலமைந்த வினாக்களில் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெறுவதற்கு மனித வள முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் ஆகியவற்றின் நடைமுறைரீதியான விடயங்களில் தனது கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் தரப்பட்ட காட்சியமைப்புக்காகப் பிரயோகிக்காது சம்பந்தமற்ற கோட்பாட்டு ரீதியான விடயங்களை தேவையில்லாமல் விபரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். வினாப்பத்திரத்திலேயே விடை எழுத வேண்டாம்.
2. இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகத்தினால் வெளியிடப்பட்ட சுய கற்றல் புத்தகம் முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கி சிறந்த வழிகாட்டல்களை வழங்கியிருப்பதால் அதிலிருந்து உச்சபட்ச பயனைப் பெற்றுக்கொள்க.
3. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.
4. பரீட்சை எழுதும்போது நேர முகாமைத்துவம் முக்கியமானது.
5. வரைவிலக்கணங்களுடன்கூடிய **செயல் வினைச் சொல் நிரல்** இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லைக்** கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள், செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் **வரைவிலக்கணத்தை** அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
6. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.
7. வினாப்பத்திரத்திலேயே விடைகளை எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டாம்.
8. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.
9. அறிவினை நிகழ்நிலைப்படுத்திக்கொள்வதற்காக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகள், கையேடுகள், பாடப்புத்தகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.
10. கட்டாய வினாக்களுக்கு விடையளிக்காது இருப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். இப்பழக்கம் குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.
11. சித்தியடைதல் என்னும் பிரதான நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -